(*c*) The tenements will be allotted after all the essential amenities like water-supply, drainage, road, etc., have been provided.

(*d*) The tenements are being constructed for the families of Tondiarkuppam and Kasipuram slums, and allotment will be made on the basis of the civic survey conducted. If the slum dwellers of Tondiarkuppam and Kasipuram slums do not occupy the tenements, they will be allotted to other slum dwellers nearby.

**சர்க்கார் பூந்தோட்டம் (உதகை)**

950-டி. கேள்வி.—**கனம் திரு. டி. கர்ச்சா கவுடர் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உதகையிலுள்ள சர்க்கார் பூந்தோட்டத்தை புதிய முறையில் அழகுபடுத்தும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆமென்றால், எவ்வாறு ?

(உ) அதற்காகும் செலவென்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) தோட்டத்தின் அழகை அதிகப்படுத்துவதற்கு கூடுதலான மின் விளக்குகளை பொருத்தும் விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

(உ) சுமார் ரூபாய் 76,140.

MR. SPEAKER : I think we can take some more time to finish the rest of the questions.

**பீங்கான் தொழில் அபிவிருத்தி**

950-இ கேள்வி.—**திரு. கே. நாராயணசாமி பிள்ளை :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா —

விருத்தாசலத்தில் பீங்கான் தொழிற்சாலையில் செய்யப்படும் பொருள் களுக்கு இன்னும் அதிகமான விற்பனை வாய்ப்பு கிடைக்க என்ன நட வடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் :** விருத்தாசலம் பீங்கான் தொழிற்சாலையில் செய்யப்படும் பொருள்களின் விற்பனையை அதிகரிக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன :—

(1) எல்லா அரசாங்கத் துறைகளிலும் தேவைப்படுகிற சுகாதார (பீங்கான்) உபகரணங்கள் (Sanitary wares) விருத்தாசலம் பீங்கான் தொழிற்சாலையிலிருந்தே வாங்கப்படவேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

(2) உபகரணங்களை விற்பனை செய்வதற்காக இத் தொழிற்சாலை, டைரெக்டர் ஜெனரல் சப்ளைஸ் அண்ட் டிஸ்போஸல்ஸ், சென்னை சிறு தொழில் கார்ப்பரேஷன் இவ்விடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத ஞல் அதிகமான வியாபார விசாரணைகள் வருகின்றன. இம்மாநிலத்தில் உள்ள எல்லா தொழில் துறை உதவி இயக்குநர்கள் மூலம் இந்த சுகாதார உபகரணங்கள் விளம்பரம் செய்யப்படுகின்றன. மேலும் அதிக அளவில் வாங்கக்கூடியவர்களை அடிக்கடி சந்திக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

**கிஸ்தி கொடுக்கக்கூடாதென பிரசாரம் (பவானி தாலுகா)**

950-எப். கேள்வி.—**திரு. அ. கு. சுப்பையா :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பவானி தாலுக்காவில் சர்க்காருக்கு கிஸ்தி கொடுக்கக்கூடாது என்று மறுத்துப் பிரசாரம் செய்தார்களா ?